# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2019 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் தொடர்பான தவறுகளை தடுத்தல் சட்டம்

---

*(2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2019, நவெம்பர் மாதம் 22 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 44.00** **தபாற் செலவு : ரூபா 40.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2019 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க,**
**விளையாட்டுக்கள் தொடர்பான தவறுகளை தடுத்தல்**
**சட்டம்**

[*2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ. – ஓ. 17/2014*

**விளையாட்டுக்களில் ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்ட விரோதமான சூழ்ச்சித் திறனுடன் கையாளுதல் மற்றும் சட்டவிரோதமான பந்தயம் பிடித்தலைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் தவறுகளைப் புலனாய்வு செய்வதற்காக விசேட புலனாய்வுகள் அலகொன்றை நியமிப்பதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் தொடர்பான தவறுகளை தடுத்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### சட்டத்தின் குறிக்கோள்களும் அதன் ஏற்பாடுகளின் ஏற்புடைமையும்

*சட்டத்தின் குறிக்கோள்கள்.*

**2.** சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் –

(அ) விளையாட்டுக்களில் ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்டவிரோதமான சூழ்ச்சித்திறனுடன் கையாளுதல் மற்றும் சட்டவிரோதமான பந்தயம் பிடித்தலைத் தடுத்தல்;

(ஆ) விளையாட்டுக்களில் ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்டவிரோதமான சூழ்ச்சித்திறனுடன் கையாளுதல் மற்றும் சட்டவிரோதமான பந்தயம் பிடித்தல் தொடர்பான தகவல்களைப் பரிமாற்றுவதற்கும் விளையாட்டுக்களில் மிகச்சிறந்த செயல்முறைகளை

மேம்படுத்துவதற்கும் விளையாட்டு ஒழுங்கமைப்புகள், சட்டவலுவுறுத்தல் முகவராண்மைகள் மற்றும் பந்தயம் பிடித்தல் தொழிற்பாட்டாளர்களுக்கு மத்தியில் தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்;

(இ) விளையாட்டுக்களில் ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்டவிரோதமான சூழ்ச்சித்திறனுடன் கையாளுதல் மற்றும் சட்டவிரோதமான பந்தயம் பிடித்தல் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கெனவும் அக்கறை கொள்பவர்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை சீராக்குவதற்கெனவும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்;

(ஈ) தேசிய விளையாட்டுக்களின் நேர்மையைப் பாதுகாத்தல் மற்றும் பேணுதல்;

(உ) விளையாட்டுக்களில் ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்டவிரோதமான சூழ்ச்சித்திறனுடன் கையாளுதல் மற்றும் சட்டவிரோதமான பந்தயம் பிடித்தல் என்பவற்றுக்கு எதிராக சட்டவலுவுறுத்தல் முகவராண்மைகளின் ஒத்தாசையுடன் தடுப்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அவற்றை மேம்படுத்தல்;

(ஊ) உயர்தொழில்சார் விளையாட்டு ஆளணியினரின் நன்மதிப்பு மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல்; அத்துடன்

(எ) விளையாட்டுக்களில் ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்டவிரோதமான சூழ்ச்சித்திறனுடன் கையாளுதல் மற்றும் சட்டவிரோதமான பந்தயம் பிடித்தல் பற்றிய தவறுகளின் புலனாய்வுகளை நிறைவேற்றுவதற்கு சுயாதீன, பக்கச் சார்பற்ற விசேட புலனாய்வுகள் அலகொன்றை நியமித்தல்.

**3**. இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக, செயலாளர், அமைச்சரின் ஒருப்பாட்டுடன்- உடன் படிக்கைகள் முதலியன வற்றை செயலாளர் செய்து கொள்ளல்.

(அ) விளையாட்டுக்களில் மிகச்சிறந்த செயல்முறைகளை மேம்படுத்துவதற்கும் விளையாட்டுக்களின் உயர்தொழில்சார் நியமங்களைப் பேணுவதற்கும் தரமுயர்த்துவதற்கும் ஏதேனும் தேசிய அல்லது சர்வதேச விளையாட்டு ஒழுங்கமைப்புடன் அல்லது சட்ட வலுவுறுத்தல் முகவராண்மையுடன் இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் உடன்படிக்கை அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்துகொள்ளலாம்; அத்துடன்

(ஆ) ஏதேனும் தேசிய அல்லது சர்வதேச விளையாட்டு ஒழுங்கமைப்பு அல்லது சட்ட வலுவுறுத்தல் முகவராண்மையுடன் விளையாட்டுக்களில் ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்டவிரோதமான சூழ்ச்சித் திறனுடன் கையாளுதல் மற்றும் சட்டவிரோதமான பந்தயம் பிடித்தல் தொடர்பான தகவல்களைப் பரிமாறலாம்.

## பாகம் II

### அத்தியாயம் I

### விளையாட்டுக்களில் ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்டவிரோத மான சூழ்ச்சித்திறனுடன் கையாளுதல் மற்றும் சட்டவிரோத மான பந்தயம் பிடித்தல் பற்றிய தவறு

**4**. (1) (அ) எவரேனும் ஆள் அல்லது விளையாட்டு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள்- விளையாட்டுக் களில் ஆட்ட நிர்ணயம் பற்றிய தவறு.

(i) அது ஏதேனும் விளையாட்டில் அல்லது விளையாட்டு நிகழ்ச்சியில் ஊழல் ஏற்படுத்தும் என அறிந்துகொண்டு பந்தயம்

பிடித்தலில், சூதாட்டத்தில் அல்லது அவருக்கு அல்லது இன்னொரு ஆளுக்கு நிதிசார் அல்லது வேறு ஏதேனும் அனுகூலத்தை கொண்டுள்ள ஏதேனும் வேறு செயற்பாட்டில் ஈடுபடுகின்ற அல்லது இன்னொரு ஆளுக்கு நிதிசார் பிரதிகூலமொன்றை அல்லது இழப்பை ஏற்படுத்துகின்ற;

(ii) விளையாட்டு ஒன்று அல்லது ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியுடன் தொடர்பான சட்டவிரோதமான பந்தயம் ஒன்றின் விடயமாகவுள்ள ஏதேனும் முறையீனமான செயல்நிறைவேற்றுகை, செயல், செய்யாமை அல்லது விளைவொன்று நிகழ்வதை உறுதிப்படுத்துகின்ற முறையொன்றில் செயலாற்றுகின்ற;

(iii) நல்லெண்ணத்துடனான ஊடக நேர்காணல்கள் மற்றும் ஈடுபாடுகள் சம்பந்தமாக தவிர நிதிசார் அல்லது வேறு ஏதேனும் அனுகூலம், வெகுமதி அல்லது நன்மைக்காக விளையாட்டொன்று, ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சி அல்லது எவரேனும் ஆள் தொடர்பான ஏதேனும் உட்தகவலை பந்தயத் தொழிற்பாட்டாளர் ஒருவர் உள்ளடங்கலாக எவரேனும் ஆளுக்கு வழங்குகின்ற;

(iv) அத்தகைய ஆளை அல்லது ஏதேனும் விளையாட்டை அல்லது விளையாட்டு நிகழ்ச்சியை அவமதிப்புக்கு

உட்படுத்துவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட முடியுமான ஏதேனும் கொடை, கொடுப்பனவு, வெகுமதி அல்லது நன்மையை நிதிசார்ந்ததாக அல்லது வேறுவகையாக வழங்குகின்ற அல்லது பெறுகின்ற; அல்லது

(v) முற்போந்த பந்திகளில் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் நடத்தையுடன் நேரடியாகவோ அல்லது நேரடியாக வல்லாமலோ தொடர்பானதும் ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின் அக்கறைகளுக்கு பங்கமானதுமான ஏதேனும் செயல் அல்லது செய்யாமையில் ஈடுபடுகின்ற;

(ஆ) எவரேனும் தனியாள் ஆட்டக்காரர் அல்லது ஆட்டக்காரர்கள் குழு ஒன்று-

(i) உண்மையற்ற காரணங்களுக்காக அத்தகைய விளையாட்டில் அல்லது விளையாட்டு நிகழ்ச்சியில் குறைவாக செயல்புரிவதற்கு அல்லது அவற்றிலிருந்து விலகுவதற்கு தனியாக அல்லது கூட்டாக பணம் அல்லது வேறு ஏதேனும் வெகுமதி அல்லது நன்மையை பெறுகின்ற; அல்லது

(ii) எந்த விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியில் அத்தகைய ஆட்டக்காரர் அல்லது ஆட்டக்காரர்கள் குழு செயல்நிறைவேற்றத்தைக் குறைக்கின்றவாறு விளையாடுகிறாரோ அத்தகைய விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியில் பந்தயம் பிடிக்கின்ற;

(இ) எவரேனும் நடுவர், ஆட்ட நடுத்தீர்ப்பாளர் அல்லது ஆட்ட நடுவர் பணம் அல்லது வேறு ஏதேனும் வெகுமதி அல்லது நன்மைக்காக விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின் விதிகளை வேண்டுமென்றே தவறான முறையில் பயன்படுத்துகின்ற;

(ஈ) (i) பந்தயத் தொழிற்பாட்டாளர் ஒருவர் உள்ளடங்கலாக எவரேனும் ஆளினால் உடன்பட்டுக்கொள்ளத்தக்க ஒரு வழியில் ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின் ஏதேனும் புற்றரையை, மைதானத்தை அல்லது விளையாடும் மேற்பரப்பை தயாரிப்பதற்கு; அல்லது

(ii) ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின் புற்றரை, மைதானம் அல்லது விளையாடும் மேற்பரப்பின் தயாரிப்பு மற்றும் நிலைமை பற்றிய தகவல்களை வழங்குவதற்கு,

எவரேனும் காப்பாளர் அல்லது ஏதேனும் இடப் பணியாட்டொகுதி, மைதானப் பணியாட்டொகுதி அல்லது ஆதாரப் பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினர் பணம் அல்லது வேறு ஏதேனும் வெகுமதி அல்லது நன்மையைப் பெறுகின்ற; அல்லது

(உ) ஓய்வுபெற்ற ஆட்டக்காரர் அல்லது விளையாட்டு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள் உள்ளடங்கலாக எவரேனும் ஆள், பணம் அல்லது வேறு ஏதேனும் வெகுமதி அல்லது நன்மைக்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆட்டக்காரர்களின் செயல்நிறைவேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தவென அவர்களை அணுகுவதற்கு வேறு எவரேனும் ஆளினால் பயன்படுத்தப்படுகின்ற,

ஏதேனும் ஒழுங்கேற்பாடு உள்ளடங்கலாக, பணம் அல்லது வேறு ஏதேனும் வெகுமதி அல்லது நன்மைக்காக அத்தகைய விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின் நெறியின் கிரமமற்ற மாற்றம் அல்லது முடிவின்மீது ஏதேனும் ஒழுங்கேற்பாட்டுடன் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தனியாக அல்லது இன்னொருவருடன் அல்லது ஏனையோருடன் சேர்ந்து சம்பந்தப்படுகின்ற எவரேனும் ஆள் அல்லது விளையாட்டு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள், விளையாட்டுக்களில் ஆட்டநிர்ணயம் என்னும் தவறைப் புரிகின்றார்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) தொடக்கம் (உ) வரையான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட செயல்களின் எவற்றினாலும் ஏதேனும் விளையாட்டுப் போட்டியின் நெறியின் கிரமமற்ற மாற்றம் அல்லது முடிவின்மீது ஏதேனும் ஒழுங்கேற்பாட்டுடன் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தனியாக அல்லது இன்னொருவருடன் அல்லது ஏனையோருடன் சேர்ந்து சம்பந்தப்படுகின்ற எவரேனும் ஆள் அல்லது விளையாட்டு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள், விளையாட்டுக்களில் போட்டி நிர்ணயம் என்னும் தவறைப் புரிகின்றார்.

விளையாட்டுக்களில் ஊழல் பற்றிய தவறு.

**5**. ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின் முடிவு, முன்னேற்றம், நடத்தை அல்லது வேறு ஏதேனும் அம்சத்தில் செல்வாக்குச் செலுத்துவதற்கு–

(அ) பணம் அல்லது வேறு ஏதேனும் வெகுமதி அல்லது நன்மையை பரிந்து கேட்கின்ற அல்லது ஏற்றுக் கொள்கின்ற அல்லது ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்ற அல்லது கொடைமுனைகின்ற;

(ஆ) நேர்மையீனமாக அல்லது மோசடியான முறையில் எவரேனும் வேறு ஆளை அல்லது பொருளை அத்தகைய ஆளின் சொந்த அனுகூலத்துக்காக அல்லது இன்னொருவரின் அனுகூலத்துக்காக கட்டுப்படுத்து கின்ற; அல்லது

(இ) செயலொன்றைப் புரிவதற்கு அல்லது புரிவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல் எவரேனும் ஆளை பரிந்துகேட்கின்ற, கவர்கின்ற, இணங்கவைக்கின்ற, தூண்டுகின்ற அல்லது அறிவுறுத்துகின்ற,

எவரேனும் ஆள் அல்லது விளையாட்டு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள், விளையாட்டுக்களில் ஊழல் என்னும் தவறைப் புரிகின்றார்.

விளையாட்டுக் களில் சட்டவிரோதமான சூழ்ச்சித் திறனுடன் கையாளுதல் பற்றிய தவறு.

**6**. ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின் முடிவு, முன்னேற்றம், நடத்தை அல்லது வேறு ஏதேனும் அம்சத்தில் முறையீனமாக, நியாயமற்றமுறையில் அல்லது நேர்மையீனமாக செல்வாக்குச் செலுத்துகின்ற எவரேனும் ஆள் அல்லது விளையாட்டு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள் விளையாட்டுக்களில் சட்டவிரோதமான சூழ்ச்சித்திறனுடன் கையாளுதல் என்னும் தவறைப்புரிகின்றார்.

விளையாட்டுக் களில் சட்ட விரோதமான பந்தயம் பிடித்தல் பற்றிய தவறு.

**7**. ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சி சம்பந்தமான தகவல், உட்தகவல் அல்லது சட்டவிரோத, ஊழல் நடத்தை மீதான தகவல் என அறிந்துகொண்டு, அத்தகைய தகவலை உடைமையில் வைத்துள்ளவரும்-

(அ) அவ்விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின்மீது பந்தயம் பிடிப்பவரும்;

(ஆ) குறிப்பிட்ட ஒரு வழியில் அவ்விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின்மீது பந்தயம் பிடிப்பதற்கு இன்னொரு ஆளை ஊக்குவிப்பவரும்; அல்லது

(இ) அவ்விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின்மீது பந்தயம் பிடிப்பதற்கு அல்லது பந்தயம் பிடிப்பதற்கு சாத்தியமுள்ளவராகவிருப்பின் என முதலாவது ஆள் அறிந்துள்ள அல்லது நியாயமானமுறையில் அறிந்திருக்க வேண்டிய வேறொரு ஆளுக்கு அத்தகைய தகவலை தெரிவிக்கின்றவருமான,

எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் விளையாட்டுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள் விளையாட்டுக்களில் சட்டவிரோதமான பந்தயம் பிடித்தல் என்னும் தவறைப் புரிகின்றார்.

**8.** (அ) பிரிவு 4, 5, 6 அல்லது 7 இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறைப் புரிவதில் உதவுகின்ற, உடந்தையாகவிருக்கின்ற, எத்தனிக்கின்ற அல்லது சதிசெய்கின்ற; அல்லது

உதவுதல், உடந்தையாக விருத்தல், எத்தனித்தல் முதலியன தவறொன்றாதல்.

(ஆ) பிரிவு 4, 5, 6 அல்லது 7 இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறைப் புரிவதற்கு விளையாட்டு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆளை நெருங்குகின்ற, தூண்டுகின்ற, செல்வாக்குச் செலுத்துகின்ற, ஊக்குவிக்கின்ற, இயலச் செய்கின்ற அல்லது வசதியளிக்கின்ற,

எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார்.

**9.** பிரிவு 4, 5, 6, 7 அல்லது 8 இல் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றைப் புரிகின்ற எவரேனும் ஆள், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நூறு மில்லியனை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது பத்து ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

பிரிவு 4, 5, 6, 7 அல்லது 8 இன் கீழான தவறொன்றுக்கான தண்டம்.

## அத்தியாயம் II

### வேறு தவறுகள்

**10.** பதினாறு அல்லது 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத்தவறும் எவரேனும் ஆள் அல்லது விளையாட்டு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை

தகவலை வெளிவிடுவதற்கு தவறுகின்றமை தவறொன்றாதல்.

விஞ்சாதவொரு காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*புலனாய்வு ஒன்று தொடர்பாக ஒத்துழைப்பதற்கு தவறுகின்றமை முதலியன தவறுகளாதல்.*

**11.** (அ) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறைப் புலனாய்வு செய்வதில் செயலாளர், விளையாட்டுத்துறைப் பணிப்பாளர், அலகு அல்லது அலகினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு வேண்டுமென்றே முட்டுக்கட்டையிடுகின்ற அவரைத் தடைசெய்கின்ற அல்லது ஒத்துழைப்பதற்கு தவறுகின்ற;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் புலனாய்வு நோக்கத்துக்காக எவரேனும் ஆள் அலகுக்கு முன் தோன்றுவதற்கு தேவைப்படுத்தப் படும்போது நியாயமான காரணமின்றி அவ்வாறு செய்வதற்கு தவறுகின்ற;

(இ) அலகினாலான புலனாய்வின்கீழ் ஏதேனும் விடயம் தொடர்பாக அலகினால் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு பதிலளிப்பதற்கு நியாயமான காரணமின்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்ற;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் அலகினால் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு நியாயமான காரணமின்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்ற;

(உ) இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் புலனாய்வு நோக்கத்துக்காக அலகினால் ஏதேனும் தகவலை, அறிக்கையை அல்லது ஆவணத்தை வழங்குமாறு கோரப்படும்போது அவ்வாறு செய்வதற்கு தவறுகின்ற;

(ஊ) பொய்யானதென, பூரணமற்றதென அல்லது பிழைவழியுய்க்கும் என அறிந்துகொண்டு, இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் புலனாய்வு நோக்கத்துக்காக அலகினால் ஏதேனும் தகவலை, அறிக்கையை அல்லது ஆவணத்தை வழங்குமாறு அல்லது ஏதேனும் கூற்றைச் செய்யுமாறு கோரப்படும்போது அவ்வாறு செய்கின்ற; அல்லது

(எ) ஏதேனும் தகவல், அறிக்கை, ஆவணம் அல்லது விடயம் இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட புலனாய்வொன்றுக்கு இயைபானது என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கான காரணங்களைக்கொண்டு அத்தகைய தகவல், அறிக்கை, ஆவணம் அல்லது விடயத்தை மறைக்கின்ற, பொய்யாக்குகின்ற, அழிக்கின்ற அல்லது வேறுவகையாக கையுதிர்க்கின்ற அல்லது மறைத்தலை, பொய்யாக்குதலை, அழித்தலை அல்லது கையுதிர்த்தலை விளைவிக்கின்ற அல்லது அனுமதிக்கின்ற,

அத்தகைய ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

சேவை வழங்குநர் ஒருவர் அந்தரங்கத் தன்மையைப் பேணத் தவறுதல் தவறொன்றாதல்.

**12.** அந்தரங்கத்தன்மையைப் பேணுவதற்கு 32 ஆம் பிரிவினால் எவரேனும் ஆளின்மீது விதிக்கப்பட்ட கடமையை மீறி செயலாற்றும் அத்தகைய ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவான் ஒருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது பத்து ஆண்டுகளை விஞ்சாத

காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பொய்யான சார்த்துதல் களை செய்தல் தவறொன்றாதல்.

**13**. ஏதேனும் சார்த்துதலின் உள்ளீடு பொய்யானதென அறிந்துகொண்டு அல்லது அத்தகைய சார்த்துதல் உண்மையற்றது என நம்புவதற்கான காரணங்களைக் கொண்டு, இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் எவரேனும் ஆளினால் வெளிவிடப்பட்ட ஏதேனும் தகவலில் அத்தகைய பொய்யான சார்த்துதலை செய்கின்ற அத்தகைய ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவான் ஒருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆட்கள் குழுவொன்றி னாலான தவறுகள்.

**14**. இச்சட்டத்தின்கீழான தவறொன்று, ஆட்கள் குழுவொன்றி னால் புரியப்படுகின்றவிடத்து, அப்போது அவ்வாட்கள் குழு-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அப்போது அத்தவறு புரியப்படும் நேரத்தில் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவர், முகாமையாளர், அலுவலர் அல்லது சேவையாளராக விருந்த ஒவ்வொரு ஆளும்;

(ஆ) குழுமம் ஒன்றாகவிருப்பின், அப்போது அத்தவறு புரியப்படும் நேரத்தில் அக்குழுமத்தின் பங்காளர் ஒருவராகவிருந்த ஒவ்வொரு ஆளும்; அல்லது

(இ) குழுமம் ஒன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அத்தவறு புரியப்படும் நேரத்தில் அத்தகைய குழுவின் உறுப்பினர் ஒருவராகவிருந்த ஒவ்வொரு தனியாளும் அத்தகைய குழுவின் முகாமை மற்றும் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பாகவிருந்த ஒவ்வொரு அலுவலரும்,

விடயத்துக்கேற்ப அத்தகைய ஆள், தனியாள் அல்லது அலுவலர் அத்தவறு தாம் அறியாமல் புரியப்பட்டது என அல்லது அத்தகைய ஆள் அத்தவறு புரியப்படுதலை தடுப்பதற்கு எல்லா உரிய விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தார் என எண்பித்தாலேயொழிய, அத்தவறைப் புரிந்துள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும்.

**15.** இப்பாகத்தின் நோக்கங்களுக்காக– பொருள் கோடல்.

(அ) “ஊழல் நடத்தை மீதான தகவல்” என்பது, ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின் விளைவொன்றில் ஊழல் ஏற்படுத்துகின்ற நடத்தை அல்லது உத்தேசிக்கப்பட்ட நடத்தை தொடர்பான தகவல் எனப் பொருள்படும்;

(ஆ) ‘‘உட்தகவல்’’ என்பது, பொதுவாக கிடைக்கக் கூடியதாகவிராதுள்ள, அத்துடன் அது பொதுவாக கிடைக்கக்கூடியதாகவிருப்பின் ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின்மீது பந்தயம் பிடிப்பதா அல்லவா என்பதை முடிவுசெய்வதில் அல்லது வேறு ஏதேனும் பந்தயம் பிடித்தல் முடிபைச் செய்வதில் அத்தகைய விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியின்மீது பொதுவாக பந்தயம் பிடிக்கும் எவரேனும் ஆளின்மீது செல்வாக்குச் செலுத்துவதாகவிருக்கும் அல்லது செல்வாக்குச் செலுத்தக்கூடிய சாத்தியமுடையதாகவிருக்கும் தகவல் எனப் பொருள்படும்; அத்துடன்

(இ) “உதவுதல்”, “உடந்தையாகவிருத்தல்”, “எத்தனித்தல்” மற்றும் ‘‘சதி செய்தல்’’ என்பன, (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையில் உள்ளவாறான அதேகருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் III

### தகவலை வெளிவிடுதல்

*செயலாளர் முதலியவர்களுக்கு தகவலை வெளிவிடுதல்.*

**16.** *(1)* எவரேனும் ஆள் அல்லது விளையாட்டொன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள்-

(அ) நான்கு, 5, 6, 7 அல்லது 8 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயலில் அல்லது செய்யாமையில் ஈடுபடுவதற்கு அல்லது அதனைப் புரிவதற்கு எவரேனும் ஆளினால் நெருங்கப்படுகின்றவிடத்து, தூண்டப்படுகின்றவிடத்து அல்லது அச்சுறுத்தப்படுகின்றவிடத்து; அல்லது

(ஆ) எவரேனும் ஆள் அல்லது விளையாட்டொன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள் 4, 5, 6, 7 அல்லது 8ஆம் பிரிவின்கீழான தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயலில் அல்லது செய்யாமையில்-

(i) ஈடுபடுத்தப்பட்டிருந்தார் அல்லது அதனைப் புரிந்துள்ளார்;

(ii) ஈடுபடுவதற்கு அல்லது அதனைப் புரிவதற்கு நெருங்கப்பட்டிருந்தார், தூண்டப்பட்டிருந்தார் அல்லது அச்சுறுத்தப்பட்டிருந்தார்; அல்லது

(iii) ஈடுபடுவதற்கு அல்லது புரிவதற்கு நேரடி அல்லது நேரடியில்லாத அச்சுறுத்தல்களைப் பெற்றிருந்தார்,

என அறிய வருகின்றவிடத்து, அல்லது அவர் நம்புவதற்கான காரணங்களைக் கொண்டிருக்கின்றவிடத்து, அல்லது நியாயமானமுறையில் சந்தேகிக்கின்றவிடத்து, அத்தகைய ஆள் அல்லது விளையாட்டொன்றுடன் சம்பந்தப்பட்ட ஆள் அத்தகைய தகவலை எழுத்தில், நேரடியாக அல்லது இலத்திரனியல்

வழிவகைகள்மூலம் செயலாளர் அல்லது விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அல்லது இச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலகுக்கு உடனடியாக வெளிவிடுதல் வேண்டும்.

(2) எவரேனும் ஆளினால் நிறைவேற்றப்படும் ஏதேனும் பந்தயம் பிடித்தலில் எவையேனும் வழமைக்கு மாறான பந்தயம் பிடித்தல் முறைகள் பற்றி எவரேனும் பந்தயம் பிடித்தல் தொழிற்பாட்டாளருக்கு அறிய வருகின்றவிடத்து அல்லது அவர் அவைபற்றி நியாயமானமுறையில் சந்தேகிக்கின்றவிடத்து, அத்தகைய பந்தயம் பிடித்தல் தொழிற்பாட்டாளர், அத்தகைய தகவலை எழுத்தில், நேரடியாக அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம் செயலாளர் அல்லது விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அல்லது அலகுக்கு உடனடியாக வெளிவிடுதல் வேண்டும்.

*செயலாளர் அல்லது விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் அலகுக்கு தகவலை ஆற்றுப் படுத்துதல்.*

**17.** (1) விடயத்துக்கேற்ப செயலாளர் அல்லது விளையாட்டுத் துறைப் பணிப்பாளர், 16 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் தகவலைப் பெறுவதன்மேல், புலனாய்வுக்காக அத்தகைய தகவலை அலகுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய தகவல் (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் 70 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதனை வெளிக்காட்டுகின்றவிடத்து, விடயத்துக்கேற்ப செயலாளர் அல்லது விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அத்தகைய தகவலை புலனாய்வுக்காகவும் குற்றவழக்குத் தொடுப்பதற்காகவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், செயலாளர் அல்லது விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அவரது சொந்தப் பிரேரணையின்மீது, இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு தொடர்பான ஏதேனும் தகவலை புலனாய்வுக்காக அலகுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

*பந்தயத் தொழிற் பாட்டாளர் களுடனான தொடர்புகளை செயலாளர் அல்லது விளையாட்டுத் துறைப் பணிப்பாளருக்கு வெளிவிடுதல்.*

**18.** (1) விளையாட்டு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள், அத்தகைய ஆளின் சொந்த அல்லது தொழில் அக்கறைகள் அல்லது எவரேனும் பந்தயத் தொழிற்பாட்டாளருடன் உள்ள வேறு எவையேனும் தொடர்புகள் அல்லது விளையாட்டுக்கள் தொடர்பாக அத்தகைய ஆளுக்குள்ள ஏதேனும் சொந்த அல்லது தொழில் அக்கறைகள் தொடர்பான எல்லாத் தகவல்களையும் செயலாளருக்கு அல்லது விளையாட்டுத்துறைப் பணிப்பாளருக்கு வெளிவிடுதல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, செயலாளர் அல்லது விளையாட்டுத்துறைப் பணிப்பாளர், அலகினால் செய்யப்பட்ட கோரிக்கையொன்றின்மீது, இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறு பற்றிய ஏதேனும் புலனாய்வு நோக்கத்துக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய செயலாளர் அல்லது விளையாட்டுத்துறைப் பணிப்பாளரினால் பெறப்பட்ட ஏதேனும் தகவலை அவ்வலகிற்கு கிடைக்கக்கூடியதாக்குதல் வேண்டும்.

## பாகம் IV

### தவறுகளைப் புலனாய்வுசெய்தல் மற்றும் அவற்றுக்கு எதிராக குற்றவழக்குத் தொடுத்தல்

*இச்சட்டத்தின் கீழான தவறுகள், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் புலனாய்வு செய்யப்படுதல் வேண்டும்.*

**19.** (1) இச்சட்டத்தினால் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்ட வாறு தவிர, இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க புலனாய்வு செய்யப்படுதல், விளங்கப்படுதல் அல்லது வேறுவகையில் கையாளப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அலகினால் நிறைவேற்றப்படும் எல்லாப் புலனாய்வுகளும் சூழ்நிலைகள் வேறுவகையாக தேவைப் படுத்துகின்றவிடத்து தவிர கூரிய நோக்குடையனவாகவிருத்தல் வேண்டும்.

**20.** இச்சட்டத்தின் பாகம் II இன் அத்தியாயம் I இன்கீழான தவறொன்று, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றி கைது செய்யத்தக்கனவான மற்றும் பிணையில் விடுபடற்பாலதல்லாத தவறொன்றாகவிருத்தல் வேண்டும்.

பாகம் II இன் அத்தியாயம் 1 இன் கீழான தவறொன்று பிடியாணை யின்றி கைது செய்யப்படத் தக்கனவாகவும் பிணையில் விடுபடற்பால தல்லாததாகவும் இருத்தல் வேண்டும்.

**21.** (1) அமைச்சர், பொலிசு திணைக்களம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், இச்சட்டத்தின்கீழான தவறொன்று தொடர்பாக புலனாய்வுகளை நடாத்துவதற்காக அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் ஒருவரின் பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள அத்தகைய எண்ணிக்கையிலான பொலிசு அலுவலர்களைக் கொண்ட (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "அலகு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சுயாதீன, பக்கச்சார்பற்ற விசேட புலனாய்வு அலகு ஒன்றை நியமித்தல் வேண்டும்.

விசேட புலனாய்வு அலகொன்றை நியமித்தல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படவேண்டிய பொலிசு அலுவலர்கள் பொலிசுப் பரிசோதனை தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) அலகின் தலைவராகவிருப்பதற்கு அலகின் உறுப்பினர் களினுள் இருந்து மிக்க சிரேட்டவராகவுள்ள உறுப்பினரை அமைச்சர் நியமித்தல் வேண்டும்.

(4) அலகின் எவரேனும் உறுப்பினரின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அலகின் உறுப்பினரொருவர் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராக விருத்தலும் வேண்டும்.

(5) அலகின் உறுப்பினரொருவர், அமைச்சருக்கு முகவரியிடப் பட்ட கடிதம் மூலம் எச்சந்தர்ப்பத்திலும் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தேதியன்றிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(6) அமைச்சர், அதற்காக குறித்துரைக்கப்பட்ட காரணங்களுடன் அவ்வாறு செய்வதற்கு அது உசிதமானது என அவர் கருதினால் பதவியிலிருந்து அலகின் எவரேனும் உறுப்பினரை அகற்றலாம்.

(7) அலகின் எவரேனும் உறுப்பினரின் இறப்பு, பதவிவிலகுகை, பதவியிலிருந்து அகற்றப்படுதலின் விளைவாக அல்லது வேறுவகையாக அலகின் உறுப்பாண்மையில் வெற்றிடம் ஒன்று நிகழும் பட்சத்தில் அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு இன்னொரு ஆளை நியமித்தல் வேண்டும்.

(8) அலகின் எவரேனும் உறுப்பினரின் இறப்பு, பதவிவிலகுகை, பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லது வேறுவகையாக விளைவிக்கப்பட்ட வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு இன்னொரு ஆள் நியமிக்கப்படுகின்றவிடத்து, அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அலகின் எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும்.

(9) அலகின் ஒவ்வொரு உறுப்பினருக்கும், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(10) அலகின் உறுப்பினர்கள், இச்சட்டத்தின்கீழ் அவர்களின் தத்துவங்கள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும் புரிவதிலும்-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியமன நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் புலனாய்வு தொடர்பில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பணிப்பு, கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின்கீழ் இருத்தல் ஆகாது:

ஆயின், எவ்வாறாயினும், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அலகின் உறுப்பினர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கான அல்லது அவர்களை இடமாற்றுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(11) அலகானது, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் செயலாற்றுதல் வேண்டும்.

**22.** (1) அமைச்சர், 21 ஆம் பிரிவின்கீழ் அலகுக்கு உறுப்பினர் ஒருவராக எவரேனும் பொலிசு அலுவலரை நியமிப்பதற்கு முன்னர், அலகின் உறுப்பினரொருவராக அத்தகைய அலுவலரின் கடமைகளை நிறைவேற்றுவதை பங்கமான முறையில் பாதிக்கக் கூடியவாறு இச்சட்டத்தின்கீழான புலனாய்வின்கீழ் உள்ள ஏதேனும் கருமம் தொடர்பாக அத்தகைய அலுவலர் நிதிசார், சொந்த அல்லது வேறு அக்கறை அல்லது தொடர்பைக் கொண்டிருக்கவில்லை என திருப்திப்படுதல் வேண்டும். *அக்கறை முரண்பாட்டை வெளிவிடுதல்.*

(2) அலகின் உறுப்பினர் ஒருவர் —

(அ) அலகின் உறுப்பினரொருவராக அத்தகைய உறுப்பினரின் நியமனத்தின்போது நிலவுகின்ற; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அலகினாலான புலனாய்வொன்றுக்கு அமைய ஏதேனும் கருமம் அல்லது எவரேனும் ஆள் தொடர்பாக ஏதேனும் புலனாய்வின் போது எழுகின்ற அல்லது எழக்கூடிய,

ஏதேனும் அக்கறை முரண்பாடு அல்லது தொடர்பு பற்றிய ஏதேனும் சம்பவத்தை அமைச்சருக்கும் பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதிக்கும் வெளிவிடுதல் வேண்டும்.

**23.** (1) அலகானது — *அலகானது தவறுகளை புலனாய்வு செய்தல்.*

(அ) பதினாறாம் அல்லது 17 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் தகவலைப் பெறுவதன்மேல், அத்தகைய தகவல் நம்பத்தக்கதெனவும் எந்த விடயத்தின் மீது புலனாய்வொன்று நடாத்தப்படவேண்டுமோ அந்த விடயத்தை அத்தகைய தகவல் வெளிவிடுகின்றது எனவும் அது திருப்திப்படின்; அல்லது

(ஆ) அலகின் தலைவர், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கான முதற்றோற்ற அளவிலான சான்று உள்ளது என திருப்திப்படின் அதன் சொந்தப் பிரேரணையின் மீது,

இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறு தொடர்பில் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடிய வாறான புலனாய்வுகளை நடாத்துதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய தகவல் அல்லது சான்று (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் 70 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதனை வெளிக்காட்டுகின்ற விடத்து, அலகானது அத்தகைய தகவலை அல்லது சான்றை புலனாய்வுக்காகவும் குற்றவழக்கு தொடுப்பதற்காகவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் புலனாய்வொன்று பூர்த்தி செய்யப்படுவதன் மேல், அலகின் தலைவர் –

(அ) அத்தகைய புலனாய்வின் கண்டுபிடிப்புகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அலகானது, இச்சட்டத்தின்கீழ் தவறொன்று புரியப்பட்டுள்ளது என சந்தேகிப்பதற்கு அதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளன என கண்டு பிடிக்கின்றவிடத்து, அத்தகைய சார்த்தப்பட்ட தவறு தொடர்பாக அலகுக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள வேறு எவையேனும் ஆவணங்களுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையை, கவனத்திற்கொள்ளப்படுவதற்கும் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்; அல்லது

(இ) புலனாய்வானது இலஞ்சச் சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதனை வெளிவிடுகின்றவிடத்து, அத்தகைய அறிக்கையை புலனாய்வுக்காகவும் குற்றவழக்கு தொடுப்பதற்காகவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

அலகின் தத்துவங்கள்.

**24.** இச்சட்டத்தின் கீழான தவறொன்றின் ஏதேனும் புலனாய்வை நடாத்தும் நோக்கத்துக்காக, அலகானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பெற்றுக்கொள்வதற்கு, பெறுவதற்கு அல்லது விசாரணை செய்வதற்கு அவசியமென அல்லது விரும்பத்தக்கதென அலகு கருதக்கூடியவாறாக எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக் கொள்வதற்கும் பெறுவதற்கும் அத்தகைய எல்லா ஆட்களை விசாரணை செய்வதற்கும்;

(ஆ) அலகினால் விசாரணை செய்யப்படும் நோக்கங் களுக்காக எவரேனும் ஆளை அலகின் முன்னர் வருகைதரும்படியும், சத்தியக்கடதாசி என்ற வகையாக அலகின் அபிப்பிராயத்தில் புலனாய்வின் கீழுள்ள கருமங்களுக்கு இயைபாக அலகினால் எழுப்பப் படக்கூடிய கேள்விகளுக்கு மறுமொழிகளை சமர்ப்பிக்கும்படியும் அவசியமேற்படின் (17 ஆம் அத்தியாயமான) சத்தியங்கள் அல்லது உறுதியுரைகள் கட்டளைச் சட்டத்துக்கு இணங்க சத்தியம் அல்லது உறுதியுரையை எடுத்தியம்பும்படியும் தேவைப் படுத்துவதற்கும்;

(இ) எவரேனுமாளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் தரவை, தகவலை, ஆவணத்தை அல்லது வேறுபொருளைக் காண்பிக்கும்படி அவரைக் கட்டளைவிட்டழைப்பதற்கும்;

(ஈ) எவரேனும் சேவை வழங்குநரை, அத்தகைய சேவை வழங்குநரின் உடைமை அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் ஒப்பப்பணம் செலுத்துநர் பற்றிய தகவல் அல்லது போக்குவரத்துத் தரவைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்துவதற்கும்;

(உ) ஏதேனும் வங்கியின் முகாமையாளரை, அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள்-

(i) எந்த ஆள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் தவறொன்று பற்றிய புலனாய்வொன்று நடாத்தப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளின்;

(ii) அத்தகைய ஆளின் வாழ்க்கைத் துணையின் அல்லது எவரேனும் பிள்ளையின்;

(iii) அத்தகைய ஆள் பணிப்பாளராகவுள்ள ஒரு கம்பெனியின்;

(iv) அத்தகைய ஆள் பயன்தரு அக்கறை கொண்டுள்ள ஒரு நம்பிக்கைப் பொறுப்பின்;

(v) அத்தகைய ஆள் பங்காளர் ஒருவராகவுள்ள ஒரு குழுமத்தின்,

ஏதேனும் கணக்குத் தொடர்பான பதிவீடுகளைக் கொண்டுள்ள வங்கியின் ஏதேனும் புத்தகத்தை, ஆவணத்தை அல்லது காசோலையைக் காண்பிக்குமாறு அல்லது அத்தகைய புத்தகத்தின், ஆவணத்தின், காசோலையின் அல்லது அதன் கண் உள்ள ஏதேனும் பதிவீட்டின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு காண்பிக்குமாறு எழுத்திலான அறிவித்தல் மூலம் பணிப்பதற்கும்;

(ஊ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் அடங்கியுள்ள தகவல்களின் அந்தரங்கத் தன்மை தொடர்பான ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு -

(i) எந்த ஆள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் தவறொன்று பற்றிய புலனாய்வொன்று நடாத்தப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளின்; அல்லது

(ii) அத்தகைய ஆளின் வாழ்க்கைத் துணையின் அல்லது எவரேனும் பிள்ளையின்,

அலுவல்கள் தொடர்பாக அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள எல்லாத் தகவல்களையும் காண்பிக்குமாறும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதும் அத்தகைய ஆள், வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை தொடர்பானது மான ஏதேனும் ஆவணத்தை அல்லது ஏதேனும் ஆவணத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி ஒன்றைக் காண்பிக்குமாறும் எழுத்திலான அறிவித்தல்மூலம் பணிப்பதற்கும்;

(எ) எந்த ஆள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் தவறொன்று பற்றிய புலனாய்வொன்று நடாத்தப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளை பின்வருமாறு சத்தியக்கடதாசி ஒன்றை கொடுத்துதவுமாறு பணிப்பதற்கும் -

(i) அத்தகைய ஆளினால் அல்லது வாழ்க்கைத் துணையினால் அல்லது அத்தகைய ஆளின் எவரேனும் பிள்ளையினால் ஏதேனும் நேரத்தில் அல்லது அலகினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நேரத்தில் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்திருக்கப்பட்ட எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை எடுத்துக்கூறியும் கொள்வனவு, கொடை, விருப்பாவணக்கொடை, மரபுரிமை என்ற வகையாகவும் சரி அல்லது வேறு வகையாகவும் சரி அவ்வாறு எடுத்துக் காட்டப்பட்ட ஆதனங்களுள் ஒவ்வொன்றும் கொள்ளப்பட்ட தேதியைக் குறித்துரைத்தும்; அத்துடன்

(ii) அலகின் அபிப்பிராயப்படி புலனாய்வுக்கு இயைபானவையாகவுள்ள அத்தகைய வேறு கருமங்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கியும்;

(ஏ) சத்தியக் கடதாசி ஒன்றை பின்வருமாறு கொடுத்துதவுமாறு எவரேனும் வேறு ஆளைப் பணிப்பதற்கும் -

(i) அலகினால் நடாத்தப்படும் புலனாய்வொன்றுக்கு அத்தகைய தகவல் உதவக் கூடுமென அலகு நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அத்தகைய ஆளினால் ஏதேனும் நேரத்தில் அல்லது அலகினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய நேரத்தில் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்திருக்கப்பட்ட எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை எடுத்துக்கூறியும்; அத்துடன்

(ii) அலகின் அபிப்பிராயப்படி அலகினால் நடாத்தப்பட்ட புலனாய்வொன்றுக்கு இயைபாகவுள்ள அத்தகைய வேறு கருமங்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கியும்;

(ஐ) அலகினால் அத்தகைய நோக்கத்துக்காக செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது நீதிவான் ஒருவரினால் அதன் சார்பாக வழங்கப்பட்ட கட்டளையொன்றின் அதிகாரத்தின்கீழ் -

(i) எந்த ஆள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுபற்றிய புலனாய்வொன்று நடாத்தப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளை;

(ii) அத்தகைய ஆளின் வாழ்க்கைத்துணை அல்லது எவரேனும் பிள்ளையை;

(iii) அத்தகைய முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளுக்காக ஏதேனும் ஆதனத்தை நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கும் வேறு எவரேனும் ஆளை;

(iv) அத்தகைய ஆள் பணிப்பாளரொருவராகவுள்ள ஒரு கம்பெனியை; அல்லது

(v) அத்தகைய ஆள் பங்காளர் ஒருவராகவுள்ள ஒரு குழுமத்தை,

நீதிமன்றத்தினால் கட்டளை இல்லாதொழிக்கப்படும் அத்தகைய காலம்வரை, அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் சொத்தாண்மையை அல்லது அதிலுள்ள ஏதேனும் அக்கறையை கைமாற்றுவதிலிருந்து தடைசெய்வதற்கும்;

(ஒ) அலகினால் அத்தகைய நோக்கத்துக்காக செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது நீதிவான் ஒருவரினால் அதன் சார்பில் வழங்கப்பட்ட கட்டளையொன்றின் அதிகாரத்தின்கீழ் -

(i) குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளரை, எந்த ஆள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுபற்றிய புலனாய்வொன்று நடாத்தப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளின் கடவுச்சீட்டையும் ஏனைய பயண ஆவணங்களையும் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறு மூன்று மாதங்களை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்குத் தடுத்துவைக்குமாறு தேவைப்படுத்துவதற்கும்;

(ii) பெயரினால் அல்லது பதவியினால் அக் கட்டளையிற் குறித்துரைக்கப்படவேண்டிய வரான எவரேனும் பொலிசு அலுவலரை, எந்த ஆள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுபற்றிய புலனாய்வொன்று நடாத்தப்படுகின்றதோ எந்த எவரேனும் ஆள், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறு மூன்று மாதங்களை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்கு இலங்கையிலிருந்து வெளியேறுவதைத் தடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா நடபடி களையும் எடுக்குமாறு தேவைப்படுத்துவதற்கும்; அத்துடன்

(ஓ) எவரேனும் ஆள், அரசாங்கம் அல்லது அரச சார்பற்ற நிறுவனத்திடமிருந்து அல்லது ஏதேனும் வெளிநாட்டு முகவராண்மையிடமிருந்து ஏதேனும் தரவு, தகவல், ஆவணம் அல்லது சான்றைக் கோருவதற்கும் அல்லது பெறுவதற்கும்.

குற்றவியல் வழக்கு நடவடிக்கை களைத் தொடுத்தல்.

**25.** குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அல்லது ஏதேனும் வேறு சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், சட்டத்துறை தலைமையதிபதி, 23 ஆம் பிரிவின்கீழ் அலகினால் நடாத்தப்பட்ட புலனாய்வொன்றின் போது சேகரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இச்சட்டத்தின் பாகம் II இன் அத்தியாயங்கள் I மற்றும் II இன்கீழான தவறொன்று தொடர்பில் இலங்கையின் மேல் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுக்கலாம்.

அலகானது வளவுகளுக்குள் நுழைந்து வளவுகளை அல்லது ஆட்களைத் தேடுகையிடல்.

**26.** (1) (அ) இச்சட்டத்தின் கீழான தவறொன்று எவையேனும் வளவுகளில் புரியப்பட்டுக்கொண்டிருக்கிறது அல்லது புரியப்பட்டுள்ளது எனவும் அத்தகைய தவறைப் புரிதல் பற்றிய சான்று எவையேனும் வளவுகளில் அல்லது எவரேனும் ஆளுடன் காணப்படுகின்றது எனவும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறைப் புரிவதுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் தரவு, தகவல், ஆவணம் அல்லது உபாயம் எவையேனும் வளவுகளில் அல்லது எவரேனும் ஆளுடன் காணப்படுகின்றது எனவும்,

சந்தேகிப்பதற்கு, அலகிற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அலகின் உறுப்பினர் ஒருவர் அல்லது அலகின் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, அத்தகைய வளவுகளில் நுழைந்து அவற்றை அல்லது அத்தகைய வளவுகளில் காணப்படுகின்ற எவரேனும் ஆளை தேடுகையிடலாம். அத்தகைய உறுப்பினர் அல்லது ஆள் அத்தகைய தேடுகையை நிறைவேற்றுவதற்கு அலகிற்கு வெளியிலிருந்து பொலிசு அலுவலர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவையேனும் வளவுகளினுள் நுழைந்து அவற்றை அல்லது ஆளை தேடுகையிடுகின்ற அலகின் உறுப்பினர் ஒருவர் அல்லது அலகின் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் –

(அ) அத்தகைய வளவுகளில் காணப்படுகின்றதும் அல்லது அத்தகைய ஆளிடம் உள்ளதும், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிதல் பற்றிய சான்றாகவுள்ளது என அத்தகைய உறுப்பினர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் நம்புவதற்கு காரணங்களாகவுள்ளதுமான ஏதேனும் உபாயத்தை கைப்பற்றலாம்;

(ஆ) அத்தகைய வளவுகளில் காணப்படுகின்றதும் அல்லது அத்தகைய ஆளிடம் உள்ளதும் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிதல் பற்றிய சான்றாகவுள்ளது என அத்தகைய உறுப்பினர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் நம்புவதற்கு காரணங்களாகவுள்ளதுமான தரவு, தகவல் அல்லது ஆவணத்தைக் கைப்பற்றலாம் அல்லது அதன் ஏதேனும் பிரதியைப் பெறலாம்; அல்லது

(இ) இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதுடன் சம்பந்தப்பட்டுள்ளார் என அத்தகைய உறுப்பினர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் நம்புவதற்கு காரணங்களாகவுள்ள அத்தகைய வளவுகளில் காணப்படுகின்ற எவரேனும் ஆளை கைது செய்யலாம்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதாக சந்தேகிக்கப்பட்ட எவரேனும் ஆளை ஆணையின்றி கைதுசெய்யும் அலகின் உறுப்பினர் ஒருவர் அல்லது அலகின் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் அவசியமற்ற தாமதமின்றியும் கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து நீதிவானின் முன் நிறுத்துவதற்கான பயணத்திற்காக எடுக்கப்பட்ட நேரம் புறநீங்கலாக அத்தகைய கைதிலிருந்து இருபத்தி நான்கு மணித்தியாலங்களினுள்ளும், அத்தகைய ஆள் கைதுசெய்யப்பட்ட இடத்திற்கு மிக்க அண்மையில் உள்ள நீதிமன்ற நீதிவானுக்கு முன்னர் அத்தகைய ஆளை முன்னிறுத்துதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் பயனைக்கொண்டு, எவையேனும் வளவுகளினுள் நுழைவதற்கு ஆளொருவர் ஏதேனும் தத்துவத்தைக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய தத்துவத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்கு நியாயமான முறையில் அவசியமான வாறாக அத்தகைய வலோற்காரத்தைப் பயன்படுத்தலாம்.

(5) பெண்ணொருவர் தேடுகையிடப்படுவதை செய்விப்பதற்கு அவசியமேற்படுகின்றபோதெல்லாம், தேடுகையானது, ஒழுக்கத்துக்கான கடும் கவனத்துடன் இன்னொரு பெண்ணினால் செய்யப்படுதல் வேண்டும்.

தகவலைப் பேணிக் காத்தல்.

**27**. (1) அலகின் உறுப்பினர் ஒருவர் அல்லது அலகின் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் -

(அ) ஏதேனும் இலத்திரனியல் உபாயத்தில் தேக்கிவைக்கப் பட்டுள்ள ஏதேனும் தகவல் அல்லது தரவு இச்சட்டத்தின்கீழ் புலனாய்வொன்றின் நோக்கங்களுக்கு நியாயமாகத் தேவைப்படுகின்றது எனவும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தகவல் அல்லது தரவு இழக்கப்படக்கூடிய, அழிக்கப்படக்கூடிய, திரிபுபடுத்தப்படக்கூடிய அல்லது அணுகமுடியாததாக்கப்படக்கூடிய ஆபத்திருக்கின்ற தெனவும்,

திருப்திப்படுகின்றவிடத்து, அத்தகைய உறுப்பினர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், எழுத்திலான அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான முப்பது நாட்களை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்கு தகவல் அல்லது தரவு பேணிக்காக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு அத்தகைய இலத்திரனியல் உபாயத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவானொருவருக்குச் செய்யப்படும் விண்ணப்பமொன்றின் மீது எந்தக் காலப்பகுதிக்கு தகவல் அல்லது தரவு பேணிக்காக்கப்படவேண்டுமோ அந்த காலப்பகுதி அத்தகைய மேலும் ஒரு காலப்பகுதிக்கு நீடிக்கப்படலாம்; இது கூட்டுமொத்தமாக தொண்ணூறு நாட்களை விஞ்சுதலாகாது.

ஏதேனும் உபாயத்தைக் கைப்பற்றுதல் அதன் வழமையான பயன்பாட்டை தடைப் படுத்துவதற் காகாது.

**28**. இச்சட்டத்தின் கீழான தவறொன்றுபற்றிய புலனாய்வொன்றின்போது ஏதேனும் தேடுதலை, பரிசோதனையை நடாத்துகின்ற அல்லது வேறு ஏதேனும் செயலைச் செய்கின்ற அலகின் உறுப்பினர் ஒருவர் அல்லது அலகின் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் -

(அ) சட்டமுறையான எந்த தொழிலுக்கு தேடுகையிடப்படுகின்ற அல்லது பரிசோதிக்கப்படுகின்ற ஏதேனும் உபாயம் பயன்படுத்தக்கூடுமோ அந்த சட்டமுறையான தொழிலின் சாதாரண நெறிமுறை அத்தகைய தேடுகை, பரிசோதனை அல்லது புலனாய்வால் தடைப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தொழிலின் சாதாரண நெறிமுறையை நடாத்துவதனை அத்தகைய கைப்பற்றுகை பங்கப் படுத்துமாயின் -

(i) அத்தகைய உபாயம் அமைந்துள்ள வளவுகளில் தேடுகை அல்லது பரிசோதனையை நடாத்துவது சாத்தியமில்லாதிருந்தாலொழிய; அல்லது

(ii) தவறு புரியப்படுவதை அல்லது தவறு தொடர்ந்து நடைபெறுவதைத் தடுப்பதற்கு அல்லது வேறு வகையில் இழக்கப்படக்கூடிய, அழிக்கப்படக் கூடிய, திரிபுபடுத்தப்படக்கூடிய அல்லது அணுகமுடியாததாக்கப்படக்கூடிய ஏதேனும் தகவல் அல்லது தரவின் கட்டுக்காப்பைப் பெறுவதற்கு அத்தகைய உபாயத்தை கைப்பற்றுவது அத்தியாவசியமாக இருந்தாலேயொழிய

அத்தகைய உபாயத்தை கைப்பற்றுதலாகாது.

*கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் முதலியன பற்றிய நிரல் ஒன்றை வழங்குதல்.*

**29**. இச்சட்டத்தின் கீழான தவறொன்றுபற்றிய புலனாய்வொன்றின்போது ஏதேனும் தேடுகை அல்லது பரிசோதனையின் போது ஏதேனும் தரவு, தகவல், ஆவணங்கள் அல்லது உபாயங்கள் கைப்பற்றப்பட்டுள்ளவிடத்து அல்லது அணுகமுடியாததாக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய தேடுகை அல்லது பரிசோதனையை நடாத்தும் அலகின் உறுப்பினர் அல்லது அலகினால் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர் அத்தகைய கைப்பற்றுகையின் அல்லது அதனை அணுகமுடியாததாக்கப்பட்ட தேதியும் நேரமும் உட்பட அத்தகைய தரவு, தகவல், ஆவணங்கள் அல்லது உபாயங்கள் பற்றிய முழுமையான நிரலொன்றை அத்தகைய தரவு, தகவல், ஆவணங்கள் அல்லது உபாயங்களின் சொந்தக்காரருக்கு அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

*பாகம் II இன் அத்தியாயம் I இன் கீழான தவறுகளை மேல் நீதிமன்றம் விளங்குதல்.*

**30**. (1) இச்சட்டத்தின் பாகம் II இன் அத்தியாயம் I இன் கீழான ஒவ்வொரு தவறும், அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கையின் மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படற்பாலதாகவிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் பாகம் II இன் அத்தியாயம் I இன் கீழான தவறொன்று இலங்கைக்கு வெளியே புரியப்படுகின்றவிடத்து –

(அ) அத்தகைய தவறைப் புரிந்த ஆள் இலங்கையில் சமுகமாயிருந்தால்;

(ஆ) அத்தகைய தவறைப் புரிந்த ஆள் இலங்கைப் பிரசை ஒருவராகவிருந்தால்;

(இ) எந்த ஆள் தொடர்பாக தவறானது புரியப்பட்டுள்ளதென சார்த்தப்படுகின்றதோ அந்த ஆள் இலங்கைப் பிரசையாகவிருந்தால்; அல்லது

(ஈ) அத்தகைய தவறு இலங்கையின் வான்வெளியில் அல்லது இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் இருக்கும்போது வானூர்தியொன்றில் அல்லது கலத்தில் புரியப்பட்டால்,

அத்தகைய மேல் நீதிமன்றம் அத்தகைய தவறு இலங்கையில் புரியப்படுகின்றது என்றாற் போன்று அத்தகைய தவறை விளங்குவதற்கு நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறு தொடர்பாக எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், எந்தத் தத்துவத்தின் பிரயோகம் தொடர்பில் இச்சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் முதன்மைச் சட்டவாக்கத்தினால் அல்லது அதன்கீழ் ஏற்பாடு எதுவும் அல்லது போதிய ஏற்பாடு எதுவும் செய்யப்பட்டிராதுள்ளதோ அந்த ஏதேனும் தத்துவத்தின் பிரயோகம் உட்பட ஏதேனும் கேள்வி எழுகின்றவிடத்து, மேல்நீதிமன்றமானது அத்தகைய கட்டளைகளும் பணிப்புகளும் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாகவிராத அல்லது ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு அவற்றை ஆக்கவும், வழங்கவும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் V

### பொது

இரகசியத்தைப் பேணுவதற்கான கடமை.

**31.** செயலாளர், விளையாட்டுத்துறைப் பணிப்பாளர், அலகின் ஒவ்வொரு உறுப்பினர் அல்லது இச்சட்டத்தின்கீழ் செயலாளர் அல்லது விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அல்லது அலகுக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு அலுவலரும், ஊழியரும் அல்லது வேறு ஆளும் அத்தகைய செயலாளர், விளையாட்டுத்துறைப் பணிப்பாளர், உறுப்பினர், அலுவலர், ஊழியர் அல்லது ஆளின் கடமைகளை ஏற்கும் முன்னர், பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களையும் பணிகளையும் புரிகையில் மற்றும் நிறைவேற்றுகையில் அவரால் பெறக்கூடிய அல்லது அவரின் உடைமைக்கு அல்லது அறிவுக்கு வரக்கூடியதான ஏதேனும் தகவலை வெளிவிடாமலிருக்க வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும் –

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக;

(ஆ) ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் தேவைப்படுத்தப்படும்போது; அல்லது

(இ) அவ்வாறு செய்யும்படி சட்டநீதிமன்றமொன்றினால் தேவைப்படுத்தப்படும் போது

சேவை வழங்குநர்கள் அந்தரங்கத் தன்மையைப் பேணுதல்.

**32.** (1) எந்தச் சேவை வழங்குநரிடமிருந்து இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தகவல் அல்லது தரவு கோரப்பட்டுள்ளதோ அல்லது பெறப்பட்டுள்ளதோ அந்தச் சேவை வழங்குநர் ஒவ்வொருவரும் அல்லது 27ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் தகவலை அல்லது தரவை பேணிக்காப்பதற்கு எந்த ஆளுக்கு எழுத்திலான அறிவித்தலொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆளும் அத்தகைய தகவல் அல்லது தரவு தொடர்பிலும் அத்தகைய தகவல் அல்லது தரவு கோரப்பட்டுள்ளது, பெறப்பட்டுள்ளது அல்லது பேணிக்காக்குமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளது என்ற நிகழ்வு தொடர்பிலும் கண்டிப்பான அந்தரங்கத்தன்மையைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் சட்டமுறையான அதிகாரத்துடன் தவிர அத்தகைய விடயங்கள் தொடர்பில் ஏதேனும் வெளிப்படுத்துகையை செய்தலுமாகாது.

(2) சேவை வழங்குநர் ஒருவர் இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றின் நோக்கங்களுக்காக ஏதேனும் தகவலை அல்லது தரவை வெளிவிடுவதற்காக குடியியல் அல்லது குற்றவியல் சட்டத்தின்கீழ் நடவடிக்கைக்காளாக்கப்படுதலாகாது.

ஒழுக்கவியல் கோவையைப் பேணுதல்.

**33.** (1) இச்சட்டத்தின்கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகத்தின் முகாமைச் சபையின் செயலாளர் அத்தகைய விளையாட்டில் ஒழுக்காற்றைப் பேணுதலை உறுதிப்படுத்தும் மற்றும் ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்டவிரோதமான சூழ்ச்சித்திறனுடன் கையாளுதல் மற்றும் சட்டவிரோதமான பந்தயம் பிடித்தலை தடுக்கும் நோக்கத்துக்காக அத்தகைய விளையாட்டுடன் சம்பந்தப்பட்ட ஆட்களின் நடத்தையை ஆளும் ஒழுக்கவியல் கோவையொன்றை செயலாளரின் பணிப்புகளுக்கு அமைய பேணுதல் வேண்டும்.

(2) விளையாட்டொன்றுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஆளும் அந்தந்த விளையாட்டின் ஒழுக்கவியல் கோவையின் ஏற்பாடுகளினால் பிணிக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய விளையாட்டின் ஒழுக்கவியற் கோவையின் ஏற்பாடுகளை மீறி செயலாற்றும் விளையாட்டொன்றுடன் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆள், அத்தகைய ஒழுக்கவியல் கோவையில் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய தடைவிதிப்புகளுக்கு ஆளாதலும் வேண்டும்.

வெகுமதி நிதியம்.

**34.** (1) இச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளினால் புரியப்பட்ட ஏதேனும் தவறினைக் கண்டுபிடிப்பதனை விளைவிக்கின்ற தகவலை வழங்குகின்ற ஆட்களுக்கு வெகுமதிகளை அளிக்கும் மற்றும் அத்தகைய தவறு பற்றி குற்றவழக்கு தொடுக்கும் நோக்கத்துக்காக செயலாளரின் கட்டுப்பாடு மற்றும் நிருவாகத்தின்கீழ் வெகுமதி நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். அலகின் உறுப்பினர்கள் வெகுமதி நிதியத்திலிருந்தான ஏதேனும் வெகுமதிக்கு உரித்துடையவராதல் ஆகாது.

(2) ஒரு நோக்கத்துக்காக பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் வெகுமதி நிதியத்துக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சர், தகவல்களை வழங்கும் ஆட்களுக்கு வெகுமதிகள் செலுத்தப்படவேண்டிய முறையை விதித்துரைக்கலாம். வெகுமதித் தொகை தவறொன்றைக் கண்டுபிடித்தல், வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல் மற்றும் வெற்றிகரமான குற்றவழக்குத் தொடுத்தல் என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) செயலாளர், வெகுமதிநிதியத்தின் வருமானம் மற்றும் செலவினம் அத்துடன் வெகுமதி நிதியம் தொடர்பான வேறு எல்லா நிதிசார் கொடுக்கல்வாங்கல்களினதும் முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(5) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் வெகுமதி நிதியத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வுக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்கான பாதுகாப்பு.

**35.** அலகின் உறுப்பினர் எவரும் அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அலகுக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், ஊழியர் அல்லது வேறு ஆள் எவரும், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக விடயத்துக்கேற்ப அத்தகைய உறுப்பினர், அலுவலர், ஊழியர் அல்லது ஆளினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படுகின்ற அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் சட்டமுறையான செயலுக்காக ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வேறு சட்டப்படியான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதல் ஆகாது.

மீள ஒப்படைத்தல் ஒழுங்கு ஏற்பாடுகள் தொடர்பான ஏற்பாடுகள்.

**36.** இலங்கை அரசாங்கத்திற்கும் வேறு ஏதேனும் அரசின் அரசாங்கத்திற்கும் இடையில் மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடொன்று வலுவிலிருக்கின்றவிடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடு தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின், 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் நோக்கத்துக்காக இச்சட்டத்தின் பாகம் II இன் அத்தியாயம் I இன் கீழான தவறொன்று தொடர்பில் மீள ஒப்படைத்தலுக்கான ஏற்பாடுகளை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**37.** தேசிய அரசுப்பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டம், அச்சட்டத்திற்கான அட்டவணையின் பாகம் ஆ இனை உடனடுத்து முன்னர் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தைத் திருத்துதல்.

"( ) 2019 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் தொடர்பான தவறுகளைத் தடுத்தல் சட்டத்தின் கருத்தினுள் தவறொன்று.".

**38.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தி ஏழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தில் உள்ளடங்கியது எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் பாகம் II இன் அத்தியாயம் I இன்கீழான தவறொன்று அச்சட்டத்தின்கீழ் மீள ஒப்படைத்தல் நோக்கங்களுக்காக மட்டும் பணம் சார் தவறொன்றாக அல்லது அரசியற் தன்மையொன்றின் தவறொன்றாக அல்லது அரசியல் தவறொன்றுடன் சம்பந்தமான தவறொன்றாக அல்லது அரசியல் நோக்கங்களால் உந்தப்பட்ட தவறொன்றாக இராததாகக் கருதப்படுதல் வேண்டும்.

மீள ஒப்படைத்தற் சட்டம் தொடர்பான பொருள் கோடல்.

**39.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்படுவதற்கு இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பில் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றவை அல்லது அதிகாரமளிக்கப்படு கின்றவை தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

ஒழுங்குவிதிகள்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர், இச்சட்டத்தின்கீழ் தவறுகளைத் தடைசெய்தல், கண்டுபிடித்தல் மற்றும் புலனாய்வு செய்தல் நோக்கத்துக்காக எடுக்கப்படவேண்டிய வழிமுறைகள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) (அ) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று அவ்வாறு ஒழிக்கப்பட்டதாக கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவித்தல், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்.

**40**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப் படுத்தினாலேயொழிய

"பந்தயம் பிடித்தல் தொழிற்பாட்டாளர்" என்பது ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சி தொடர்பாக ஏதேனும் வடிவத்திலான பந்தயம் பிடித்தல் செயற்பாட்டை ஊக்குவிக்கின்ற, அதில் தரகராக செயற்படுகின்ற, ஒழுங்கேற்பாடு செய்கின்ற அல்லது நடாத்துகின்ற ஏதேனும் கம்பெனி அல்லது பொறுப்புமுயற்சி எனப்பொருள்படும் என்பதுடன் அத்தகைய கம்பெனி அல்லது பொறுப்புமுயற்சியின் எவரேனும் பணிப்பாளர், பங்காளர் அலுவலர், ஊழியர், சேவையாளர் மற்றும் முகவரை உள்ளடக்கும்;

"முகாமைச் சபை" என்பது, ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகத்தின் அலுவல்களின் முகாமை மற்றும் நிருவாகம் என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள குழு எனப் பொருள்படும்;

"பிள்ளை" என்பது, பதினெட்டு வயதின்கீழான ஆண் ஒருவர் அல்லது பெண் ஒருவர் எனப் பொருள்படும்;

''குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்'' என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் எனப் பொருள்படும்;

''உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

''இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு'' என்பது, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு எனப் பொருள்படும்;

''கணினி முறைமை'' என்பது, இணையத்தளம் உள்ளடங்கலாக கணினி ஒன்று அல்லது ஒன்றோடொன்று தொடர்புபட்ட கணினிகள் தொகுதி எனப் பொருள்படும்;

''குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர்'' என்பது, (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் எனப் பொருள்படும்;

''விளையாட்டுத்துறைப் பணிப்பாளர்'' என்பது தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எனப்பொருள்படும்;

''உபாயம்'' என்பது, இலத்திரனியல் உபாயம் ஒன்றை உள்ளடக்கும்;

''ஆவணம்'' என்பது, இலத்திரனியல் பதிவேடு ஒன்றை உள்ளடக்கும்;

''இலத்திரனியல் உபாயம்'' என்பது, தொடர்பாடலுக்காக அல்லது தகவல் அல்லது தரவை செய்முறைப்படுத்தல் அல்லது கடத்துதலுக்காக பயன்படுத்தப்பட்ட ஏதேனும் உபாயம் எனப் பொருள்படும்;

''இலத்திரனியல் வழிவகைகள்' என்பது, மின்னஞ்சல், தொலைநகல், குறுஞ்செய்திச் சேவை (குசெசே), நிலையான தொலைபேசி, செல்லிடத் தொலைபேசி மற்றும் ஏதேனும் தொடரிணை முறையை உள்ளடக்கும்;

''இலத்திரனியல் பதிவேடு'' என்பது, இலத்திரனியல் வடிவம் அல்லது நுண்படலத்தின் வடிவில் அல்லது அதனையொத்த வேறேதேனும் வழிவகைகளினால் தோற்றுவிக்கப்பட்ட களஞ்சியப்படுத்தப்பட்ட பெறப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட தகவல், பதிவேடு அல்லது தரவு எனப் பொருள்படும்;

''தகவல்'' என்பது, தரவு, உரை, உருவங்கள், ஒலி, குறியீடுகள், தரவுத்தளம் அல்லது நுண்படலம் என்பவற்றை உள்ளடக்கும்;

''அமைச்சர்'' என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை 43 அல்லது 44 இன்கீழ் விளையாட்டு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப்பொருள்படும்;

''தேசிய விளையாட்டுக் கழகம்'' என்பது, தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகம் எனப் பொருள்படும்;

"விளையாட்டு ஒன்றுடன் சம்பந்தப்பட்ட ஆள்" என்பது-

(அ) தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஊழியர் ஒருவர்;

(ஆ) ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராகவுள்ள எவரேனும் ஆள்;

(இ) ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகத்தின் இணைந்த உறுப்பினர் ஒருவராக, களரியாக, அணியாக, கழகமாக அல்லது இணைக் குழுவாகவுள்ள எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு;

(ஈ) தேசியரீதியாக அல்லது சர்வதேச ரீதியாக ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகத்தால் ஒழுங்கு படுத்தப்பட்ட, நடாத்தப்பட்ட, கூட்டப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் விளையாட்டில், விளையாட்டு நிகழ்ச்சியில், சர்வதேச ஆட்டத்தில், போட்டி அல்லது முதன்மை ஆட்டத்தில் பங்குபற்றுகின்ற எவரேனும் ஆட்டக்காரர்;

(உ) ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர் ஒருவராகவுள்ள பராயமடையாத ஆட்டக்காரர் ஒருவரின் விடயத்தில், அத்தகைய ஆட்டக்காரரின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் அல்லது முகவர்கள்; அத்துடன்

(ஊ) ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு நிகழ்ச்சியுடன் இணைந்த அலுவலர் ஒருவர், தேர்வாளர், விளையாட்டு முகாமையாளர், குழு உறுப்பினர், பயிற்றுநர், பயிற்சியாளர், இயன்முறையாளர், உடற்பயிற்சி நிபுணர், மருத்துவ அலுவலர், துணை மருத்துவர், நடுவர், ஆட்ட

நடுத்தீர்ப்பாளர், ஆட்ட நடுவர், காப்பாளர், ஆதாரப் பணியாட்டொகுதி உறுப்பினர், இடப் பணியாட் டொகுதியினர் அல்லது மைதானப் பணியாட் டொகுதியினர், விளையாட்டு இணையாளர் மற்றும் அனுசரணையாளர்,

எனப் பொருள்படும்;

''ஆட்டக்காரர்'' என்பது, பாடசாலை, களரி, மாகாண, தேசிய அல்லது சர்வதேச மட்டத்தில் ஏதேனும் விளையாட்டில் அல்லது விளையாட்டு நிகழ்ச்சியில் பங்குபற்றுகின்ற எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

''வளவுகள்'' என்பது, ஏதேனும் வாகனம், கலம் அல்லது வானூர்தியை உள்ளடக்கும்;

''விதித்துரைக்கப்பட்டது'' என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப் பட்டவை எனப் பொருள்படும்;

''செயலாளர்'' என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை **43** அல்லது **44** இன்கீழ் விளையாட்டு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்;

''சேவை வழங்குநர்'' என்பது-

(அ) கணினி முறைமையொன்றின் அல்லது இலத்திரனியல் முறைமையொன்றின் வழிவகைகள் மூலம் அல்லது வேறு எவையேனும் வழிவகைகள் மூலம் அதன் ஒப்பப்பணம் செலுத்துநர்களுக்குத் தொடர் பாடலுக்கான இயலுமாந்தன்மையை வழங்கும் ஒரு பகிரங்க அல்லது தனியார் உருவகம் எனப் பொருள்படும்; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் உருவகம் சார்பாக அல்லது அதன் பாவனையாளர்கள் சார்பாக கணினித் தரவு அல்லது தகவலை செய்முறைப் படுத்துகின்ற அல்லது தேக்கிவைக்கின்ற அவ்வுருவகம் எனப் பொருள்படும்;

"விளையாட்டு" என்பது, தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் நோக்கங்களுக்காக விளையாட்டொன்றாக செயலாளரினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வடிவிலான விளையாட்டு, ஆட்டம், பொழுதுபோக்கு, உடற்பயிற்சி, உடலைக் கட்டமைத்தல் மற்றும் அப்பியாசம் என்பவற்றை உள்ளடக்கும்;

"விளையாட்டு நிகழ்ச்சி" என்பது, தேசிய மட்டத்திலாயினும் சரி அல்லது சர்வதேச மட்டத்திலாயினும் சரி ஏதேனும் விளையாட்டுடன் சம்பந்தமான ஆட்டம், ஆட்டமுறை, போட்டி, ஓட்டம் அல்லது ஏதேனும் நிகழ்ச்சி என்பவற்றை உள்ளடக்கும்;

"ஒப்பப்பணம் செலுத்துநர் பற்றிய தகவல்" என்பது, தனது சேவைகளுக்கு ஒப்பப்பணம் செலுத்துநர்கள் தொடர்பில் சேவை வழங்குநர் ஒருவரால் வைத்திருக்கப்படுவதும் கணினித்தரவின் வடிவத்தில் அல்லது வேறு ஏதேனும் வடிவத்தில் அடங்கியிருப்பதுமான ஏதேனும் தகவல் எனப் பொருள்படும்; அத்துடன்

"போக்குவரத்துத் தரவு" என்பது -

(அ) கணினி முறைமையொன்றின் வழியாகத் தொடர்பாடலொன்றின் சுமத்துதல்கள் தொடர்பிலானதும்;

(ஆ) சேவை வழங்குநர் ஒருவரின் பாகமான கணினி முறைமையொன்றினால் தோற்றுவிக்கப்படுகின்றதும்; அத்துடன்

(இ) ஒப்பப்பணம் செலுத்துநர் பற்றிய தகவல்களின் தொடர்பாடல்கள் மூலத்தை, சேர்விடத்தை, மார்க்கத்தை, நேரத்தை, தேதியை, அளவை, காலஅளவை அல்லது விபரங்களைக் காட்டுகின்றதுமான, தரவு என்று பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

**41.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*